Contemporaneity of Language and Literature in the Robotized Millennium
Vol: 1(3), 2019
REST Publisher
ISBN: 978-81-936097-3-6
Website: http://restpublisher.com/books/cllrm/

செடல் நாவலில் கிராமிய மரபுகள்

பெ. இளங்கோ, உதவி பேராசிரியர் (தமிழ்த்துறை), எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், இராமாபுரம்

இமையத்தின் படைப்புகள் கிராமிய மரபுகளைக் கருப்பொருளாகக் கொண்டு விளங்குகின்றன. அத்துடன் கிராம மக்களின் வாழ்க்கை, அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு நாவல் இலக்கியம் படைக்கிறார். மனித சமுதாயத்தின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி என்று நாவல் இலக்கியத்தைக் கூறலாம். இந்நாவல் இலக்கியம் பாத்திரங்கள், செயல்கள், கதைப்பின்னல் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்படுகிறது. படைப்பாளன் தன்னை பாதித்த, அல்லது தன் வாழ்வோடு ஒன்றிணைந்த சமுதாய வாழ்க்கையைத் தலைமையாகக் கொண்டு நாவல் இலக்கியம் படைக்கிறான். அவ்வகையில் இமையம் அவர்கள் படைத்த செடல் நாவலின் வாயிலாக கிராம மக்களின் வாழ்க்கையில் பின்பற்றப்படும் கிராமிய மரபுகளை இக்கட்டுரையில் காணலாம்.

இவரது எழுத்து கீழ்த்தட்டு வர்க்க மக்களின் குரலாக ஒலிக்கிறது. அம்மக்களின் அவலங்களை எடுத்துக் காட்டும் கால கண்ணாடியாக இமையம் திகழ்கிறார். இமையம் அவர்கள் இதுவரையிலும் கோவேறு கழுதைகள் (1994), ஆறுமுகம் (1999), செடல் (2006), எங் கதெ(2015) என்ற நாவல்களையும், மண்பாரம் (2004), வீடியோ மாரியம்மன் (2008), கொலைச் சேவல்(2013), சாவு சோறு (2014), நறுமணம் (2016) போன்ற சிறுகதை தொகுப்பினையும் எழுதியுள்ளார்.

'செடல்' நாவல் இலக்கியத்தில் வருகின்ற செடல் என்கிற கதைமாந்தர் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழுகிறாள். பொட்டுக்கட்டி விடப்பட்ட செடல், மனிதனுக்கு செய்யும் தொண்டு இறைவனுக்கு செய்யும் தொண்டாக கருதி நடந்துக் கொண்டாலும் அதனால் படும் வேதனைகள் செடலின் தனித்தன்மையினைக் காட்டுவனாக திகழ்கிறது. எனினும் இவளால் அனைத்து நலன்களையும் பெற்ற இச்சமுதாயம் அவளுக்காக அவப்பெயரையும், பட்டினியையும், பல இன்னல்களையுமே தருகிறது என்று இமையம் அவர்கள் கூறுகிறார். **'செடல் பொட்டுக்கட்டி விடப்பட்ட பெண்மட்டுமல்ல ஆட்டக்காரி மட்டுமல்ல, நல்ல மனுசியாகவும், தெய்வம் என்ற நம்பிக்கைக்கு உரியவளாக கடைசிவரை இருக்கிறாள்'.** என்று செடல் பற்றி இமையம் அவர்கள் கூறுகிறார்.

'என்னைச் சுற்றியுள்ள மக்களைப் பற்றி எழுதுகிறேன் அவர்களின் பிரச்சனைகளைச் சொல்ல வேண்டியதிருக்கிறது' என்று வீர.வேலுச்சாமி கூறுவதைப் போல, இமையம் அவர்கள் அவரது வாழ்வில் நடந்த அவரைப் பாதித்த நிகழ்வுகளையே படைப்புகளாகவே மாற்றியிருக்கிறார். கற்பனையாக எழுதுவதை அவர் விரும்பவில்லை. இளமைக்காலத்தில் நடந்தவற்றையே அவர் பெரும்பாலும் படைப்புகளாக மாற்றியிருக்கியார். அவரது தற்போதைய வாழ்க்கை கனவற்ற வாழ்க்கையாக, துக்கம், சந்தோசம் என எதுவும் இல்லாத வெற்று இடமாக உள்ளது என்கிறார். கதையெழுதும் போதெல்லாம் கடந்த கால நினைவுகளுக்கு செல்கிறார். அதுவே அவருக்கு பொக்கிசம் நிறைந்ததாக உள்ளது என்கிறார்.

'செடல்' நாவலில் காணப்படும் கிராமிய மரபுகள் கூத்துப் பாடல், திரைப்பாட்டு, அம்மைப் பாட்டு, பழமொழி, கேலிச்சுவையில், உணர்வு வெளிப்பாடு, கருத்து விளக்கம், பண்பு நலனைப் புலப்படுத்தல், பண்பு முரண்பாடு, மருத்துவம், உணவு, விடுகதை, நம்பிக்கைகள், தெய்வ வழிபாட்டில் மூடநம்பிக்கை, தீருநீறு பூசுதல், பிரசாதம், மழை நம்பிக்கை, மழைபெய்யச் சடங்குகள், பெண்கள் மீதான மூடநம்பிக்கை, சோதிடம், சோதிடரைக்

குறிக்கும் சொற்கள், சோதிடம், சொல்லும் பொருளும், சோதிட எதிர்ப்பு, செடல் நாவலில் சாதகம் பார்த்தல், சகுனம், சடங்குகள், இறப்பு சடங்கு, செடல் நாவலில் இறப்புச் சடங்கு, ஒப்பாரிப்பாடல், பிரிவுத் துன்பத்தினால் பாடப்படும் ஒப்பாரி, இழப்பினால் தோன்றும் ஒப்பாரி, பொருள் இழப்பு கூலிக்கு மாரடித்தல், அம்மை போட்டவர்களை பாதுகாக்கும் முறை, குழந்தை சடங்கு, புராணச்செய்திகள், செடல் நாவலில் புராணச்செய்திகள், பொட்டுக் கட்டி விடுதல், சாவுக்கு கூத்தாடுதல், கர்ணமோட்சம் போன்ற கிராமிய மரபுகளை கதை மாந்தர்களின் வாயிலாகவும் அவர்களின் வாழ்வியல் கூறுகள் வாயிலாகவும் ஆசிரியர் செடல் நாவலில் பதிவு செய்கிறார். மேற்கூறிய கிராமிய மரபுகளில் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

கிராமிய மரபுகள்

தொன்று தொட்டு மக்கள் வழக்கில் இருந்து வருகின்ற அனைத்துக் கூறுகளையும் மரபுகள் எனலாம். கிராமியமரபுகள் (நாட்டார்வழக்காறுகள்) என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும்மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடு, உணவு, உடை, சடங்குகள், வழிபாட்டு முறைகள் முதலிய கூறுகள் தனித் தன்மையுடன் நெடுங்காலமாக பின்பற்றப் படுகின்றன. இவ்வாறு பின்பற்றப்படும் அனைத்து கூறுகளையும் கிராமிய மரபுகள் எனலாம்.

கூத்துப் பாடல்

கூத்துக் கலை இன்று அழியும் தருவாயில் உள்ளது. தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியாலும், சினிமா துறையின் வளர்ச்சியாலும், கனிணியின் வருகையாலும் மக்களிடையே வரவேற்பை பெற்றிருந்த கூத்துக்கலை இன்று அழியும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது எனலாம். **“சங்க காலத்தில் கூத்துக் கலையைத் தம் வாழ்விற்குக் கருவியாகக் கொண்ட தனி இனத்தவர் இருந்தனர். அவர்கள் கூத்தர், பொருநர், விறலியர், கோடியர் எனப்பலவாறு பெயர் பெற்றனர். சங்க காலத்திற்குப் பின்னர் சமயம் ஆடற்கலையைப் போற்றி வளர்த்தது. செம்மையான பரத நாட்டியம் வளர்ந்தது” (அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.148)**

சங்க காலத்தில் எல்லாத் துறைகளிலும் ஆடலும் பாடலும் விரவியிருந்தன. பண்டையோர் ஆடிய ஆடல்களில் வள்ளிக் கூத்து என்பதும் ஒன்று. நாட்டுக்கு வளமும் வெற்றியும் கொணர்ந்த வள்ளியின் பெருமைகளைப் பாடி ஆடுவது இதுவாகும். தொல்காப்பியர் இதனை ‘வாடா வள்ளி’என்பர். வாடாவள்ளியினால் வளம்பல தரும் நாடுகளைப்பற்றிப் பெரும்பாணற்றுப்படை பாடலில்,

“வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை” (பெரும்பாண், 370-371)

என்கிறது. இக்கூத்தினை ஆடவரும் பெண்டிரும் ஆடுவர். இஃது இழிந்தோர் காணும் கூத்தென்பர்.

பொதுமக்கள் ஆடிய இன்னொரு கூத்து, குரவை எனப்படும். மலைவாழ்நர் விரும்பி ஆடியது இக்கூத்தாகும். மலையுச்சியில் குன்றவாணர்கள் மான்தோற் சிறுபறையின் முழக்கோடு ஆடினர்.

“நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரோடு
மான்தோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்தோய் மீமிசை அயரும் குரவை” (மலைபடு 320-322)

மூங்கிற் குழாயில் பெய்த முற்றிய கள்ளைக் குடித்துவிட்டு வேங்கை முற்றத்தில் குரவையாடினர்.

திரைப்பாட்டு

கிராமத்தில் விழா காலங்களில் கூத்து ஆடும் மரபு இன்று உள்ளது. கூத்து தொடங்குவதற்கு முன் திரைப்பாட்டு பாடும் வழக்கம் உண்டு. திரைப்பாட்டு கூட்டத்தில் நிலவும் சலசலப்பைப் போக்கவும், மக்களை ஒருநிலைப் படுத்தவும், கூத்தின் தொடக்கமாகவும் திரைப்பாட்டு பாடப்படுகிறது. திரைப்பாட்டு நகைச்சுவையும், ஒழுங்கான ஓசைநயமும் கொண்டு பாடப்படுகிறது என்பதனை,

“வந்தனமய்யா வந்தனம்
வந்த சனங்களெல்லாம் குந்தணும்
வருகையில வாங்கி வந்தன்

வாசனமுள்ள சந்தனம்(வந்தனமய்யா வந்தனம்)" ……. … (செடல் பக். 137-138)

என்ற வரிகள் மூலம் அறியலாம் என்பதனை திரைப்பாட்டு மக்களின் மனதை கவரும் வகையில் பாடப்படுகிறது.

பழமொழி

இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய கிராமப்புற மக்களின் அனுபவங்கள் கலையுணர்வோடு கூடிய தன்மையில் வெளிப்பட்டு, பழமொழிகளாகவும், சொலவடைகளாகவும், விடுகதைகளாகவும். தோற்றம் பெற்றுள்ளன. பின்னர் அவை தொடர்ந்து அவர்களது பேச்சு வழக்கில் கலந்து விட்ட ஒன்றாயிற்று. பழமொழிகள் பேச்சு வழக்கில் சுருங்கச் சொல்லி கருத்தை விளக்குவதற்கும், தெளிவுபடுத்துவதற்கும் பயன்படுவன. உவமையாகவும் உருவகமாகவும் அமைந்து சுவை பயப்பன.

பழமொழி மக்களின் அனுபவமாக விளங்குகிறது. பழமொழி அம்மக்களின் பண்பாட்டினையும், பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கமாக கொண்டுள்ளது. 'பழமொழிகள் அறிவின் வளர்ச்சியிலே பிறந்தவைசுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய சிறப்புக்களால் நாள்தோறும் இறந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் என்றும் இறவாமல் வாழ்கின்றன' என்று கிரேக்க நாட்டு அறிஞர் அரிட்டாட்டில் கூறுகிறார்.

பழமொழியின் சிறப்பை உணர்ந்த முன்றுறை அரையனார் நானூறு பழமொழிகளைத் தொகுத்துச் செய்யுள்களாக ஆக்கினார். பழமொழி, மொழியின் கருவூலமாக திகழ்வதால் அறிஞர் பெருமக்கள் பலர் பழமொழியினைத் தொகுத்தும், அதற்கு விளக்கவுரையும் எழுதுகின்றனர். அதோடு பழமொழியின் வாயிலாக அம்மக்களின் பண்பாட்டினையும் அறிஞர்கள் ஆய்வு செய்கின்றனர். பழமொழி பன்னெடுக் காலமாக வழக்கில் இருந்து வருகிறது. தமிழ் மொழியின் தொன்மை நூலான தொல்காப்பியம்,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம் ஏது நுதலிய முதுமொழி என்ப." (தொல், பொருள், 175)

என்று பழமொழி குறித்து விளக்கம் கூறுகிறது.

பழமொழி என்பது தேர்ந்தெடுத்த சொற்களால் இறுகக் கட்டப்பட்டது. ஒருவருக்கு மேற்பட்டோர்களுக்கிடையே கருத்துப்பரிமாற்றம் நிகழ்கின்ற போது பழமொழி பயன்படுகிறது. ஒரு கருத்தினை ஆழமாக பதிவுசெய்ய பழமொழி வழிவகைச் செய்கிறது எனலாம். இமையம் அவர்கள் தனது படைப்புகளில் அதிகமாக பழமொழியை இடத்திற்கு ஏற்ப கதை மாந்தர்களின் வாயிலாக பதிவு செய்கிறார். பழமொழிகள் தரும் பொருளுக்கு ஏற்ப அதனை பலவகையாக பகுக்கலாம். செடல் நாவலில் காணப்படுகின்ற பழமொழிகளைக் கேலிச் சுவைதருவன, உணர்வினை வெளிப்படுத்துவன, கருத்தை விளக்குவன, பண்பு நலன்களைப் புலப்புடுத்துவன என பலநிலைகளை உணர்த்தும் வகையில் பழமொழிகளை ஆசிரியர் கையாள்கிறார். இதனை விரிவாகக் காண்போம்.

கேலிச் சுவையில்

கிறித்தவப் பாதிரியார் தனது கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காகவும், கிராம மக்களிடையே நிலவுகின்ற தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்கின்ற சாதிய ரீதியான பாகுபாட்டினை தகர்க்கவும், கிராம மக்களின் வாழ்க்கையைப் பொருளாதாரரீதியில் உயர்த்தவும், அவர்களின் அன்றாடத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை நிவர்த்தி செய்யவும், கல்வியைப் போதிக்கவும், இயேசுநாதனரின் கொள்கைகளைப் போதிக்கவும் உருவாக்கிய பள்ளிக்கூடத்தையும், ஆலயத்தையும் பார்க்க ஆசைப்பட்ட செடலை கிழவி கேலியாகப் பின்வருமாறு கூறுகிறாள்.

"ஆகாயத்துல மாப்ள அந்தரத்துல பொண்ணு தாய்மாமன் இல்லாததால தாலி கட்ட தடங்கலா இருக்குங்கிற மாரி யாருடி ஒன்னெ அங்க அயிக்கிறாங்க". (செடல்ப.70).

என்று கிழவி கூறுவதன் மூலம் பொட்டுக்கட்டி விடப்பட்டவர்களுக்கு சமுதாயத்தில் நிலவிய தடைகளை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

உணர்வு வெளிப்பாடு

நாட்டார்பாடல் உணர்வு வெளிப்பாடாக அமைவது போல பழமொழியும் உணர்வை வெளிப்படுத்தப் பயண்பட்ட தன்மையினைக் காணலாம். செடல் நாவலில், பழமொழிகள் மக்களின் உள்ளத்து உணர்ச்சிகளைப் படம்பிடித்துக்

காட்டுவதைக் காணலாம். பொட்டுகட்டிவிட்ட பெண்கள், கூத்தாடும் பெண்கள் சமுதாயத்தில் படும் அவலங்களை உணர்ச்சிப் பூர்வமாக பழமொழிகளின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்,

"மந்தயில அமந்திருக்கும் மரமுமில்ல, நித்தம் நித்தம் எண்ணெ வைக்கும் தாசியுமில்ல, பூநூல் போட்டிருக்கும் பாப்பானுமில்ல, நெலயறியா வெளக்கெரியும் ஊருமில்ல" (செடல், ப.71)

" ஒதிதான் பெருத்தென்ன, கடலு நீருமிகுந்தென்ன, காட்டுல இலவு பூத்தென்ன, கண்ணியமில்லாதவ அழவா இருந்தென்ன, அடல் நிறை சாணமது நெலநெலயா கெடந்தென்ன" (செடல், ப.283)

"கொம்பு ஒடிஞ்ச மாட்டெப் பத்தியும், முட்டப்போடாத பொட்டக்கோயியப் சொல்றதுக்கு என்னா இருக்கு?"(செடல், ப.280)

மேற்கண்ட பழமொழிகள் மக்களின் எதார்த்த வாழ்வினை அழகாக எடுத்துக் காட்டுகின்றன.

கருத்து விளக்கம்

கருத்தினை விளக்கப் பழமொழிகள் பயன் படுகின்றன. இந்த உலகத்தில் காண்பது, கேட்பது எல்லாம் மாயை. எல்லாம் மாறக்கூடியது. மாறாதது மாற்றம்ஒன்றே, இந்த வாழ்க்கை நிலையற்றது, உயிரோடு இருக்கும் வரைக்கும் தான் மரியாதையும், புகழும் அவனின் வாழ்வு முடியும் போது 'பொனம்' என்ற அவலப் பெயரால் குறிப்பிடுவர். இதனை உணர்த்தும் வண்ணமாக இந்தப் பழமொழி விளங்குகிறது.

"மனுச வாயிவும் மசுரு வாயிவும் ஒண்ணுதான், தலயில இருக்கமட்டும் தான் மசுருக்கு மருவாத காத்து இருக்கு மட்டும்தான் ஒடம்புக்கு மருவாத" (செடல்,ப.266)

என்று கூறுவதன் மூலம் வாழ்க்கையின் எதார்த்தத்தை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

"அப்பனோ புள்ளையோ அவனவன் வவுறுதான் அவனவுனுக்கு உசுரு"(செடல், ப.41)

கதையின் ஓட்டத்தை மேலும் சிறப்பாகப் பதிவு செய்வதற்கும், பாத்திரங்களின் வாயிலாக நடைமுறை வாழ்க்கைச் சிக்கலை வெளிப்படுத்தவும் ஆசிரியர் கருத்துச் செறிவோடு கூடிய பழமொழிகளின் வாயிலாக விளக்குகிறார்.

பண்பு நலனைப் புலப்படுத்தல்

பல நேரங்களில் மனிதர்கள் பேச்சினூடே பழமொழியின் வாயிலாக ஒருவரின் பண்பினை குறிப்பது போன்றே நாவலிலும் பாத்திரத்தின் பண்பினை விளக்க பழமொழி உதவுகிறது.விட்டத்திடம் கூத்தாடுகிறவர்களின் கூத்தைப் பற்றி செடல் கேட்கிறாள். அதற்கு விட்டம்,

"காலம் முன்னேற, முன்னேற கூத்தாடுறதும் குரங்காட்டுறதும் மாளாதவன் செய்யுற வேலன்னு ஆயிப்போச்சி கூத்தாடிகளின் வாழ்க்கை "பச்சத் தேவிடியா அச்சில்லாத தேர் ஓட்டுவா" (செடல், ப.253) என்று சொல்ற கதெயாப் போச்சு என்று கூத்தாடிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாக ஆனதை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

வனமயில் இறந்த பிறகு பரஞ்ஜோதி செடலின் அரவனைப்பில் இருக்கிறான். எனினும் பரஞ்ஜோதிக்கு செடலை பிடிக்காமல் போக பாதிரியாரிடம் சென்று சேர்கிறான். பரஞ்சோதியை வீட்டுக்கு அழைத்தும் வரததால் **"பத்து தாயி இருந்தாலும் பெத்த தாய்ப்போல ஆவுமா? (செடல், ப. 263)** என்று செடல் புலம்புகிறாள்.

எட்டாவது பெண் குழந்தையாக பூவரும்புக்கு செடல் பிறக்கிறாள். எட்டாவது குழந்தையாக பெண் பிறந்தால்,**" எட்டாம் பொறவு எட்டிப்பார்த்த இடமெல்லாம் குட்டிச்சுவரு."(செடல், ப. 16)**. என்று சமூகத்தில் பெண் பிறப்பு மீது கட்டப்பட்ட பழமொழியை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

"ஆடுமாடு இல்லாதவன்அடமயக்கி ராசா,புள்ளெ பொண்டாட்டி இல்லாதவன் பெருமயக்கி ராசாங்கிற கதெயா" (செடல், ப.228).இயற்கையின் கோர தாண்டவத்திற்கு பெரும் பொருள் இழப்பு ஏற்படும். புத்தர் முதல் சித்தர்கள் வரை உலகின் இன்ப துன்பங்களுக்கு ஆசையே காரணம் என்றும். இவ்வுலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் அழியும் தன்மை கொண்டவை என்றும், மாற்றம் ஒன்றே மாறாதது அதுவே நிலைத்திருக்கும் மற்றவை அனைத்தும் மாறும் தன்மை கொண்டது என்று உணத்துவர். இத்தத்துவத்தை உணர்த்தும் விதமாக இப்பழமொழிஉள்ளது. இயற்கையின் சீற்றத்திற்கு எந்த பந்தமும் பாசமும் இல்லாதன் அத்தருணத்தில் ராசா என்கிறது இப்பழமொழி.

பண்பு முரண்பாடு

சிலரின் நடவடிக்கை முரண்பாடாக இருக்கும். இம்மாதிரியான போக்கு உள்ளவர்களை பெரியவர்கள் சுய புத்தியும் இருக்காது, சொல் புத்தியும் இருக்காது என்று சொல்லக் கேள்விப் பட்டிருப்போம். இக்கருத்தை வெளிப்படுத்தும் விதமாக செடல் நாவலில் ஆசிரியர் கீழ்க்கண்ட பழமொழியின் வாயிலாக ஊராரின் சுய புத்தியின்மையை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

"மயயிலயும் நனயமாட்டானுவோ, வெயில்லயும் காயமாட்டானுவோ, கெணத்துல குதின்னாலும் குதிக்க மாட்டானுவோ, எயிந்திரிச்சி கரையேறி வான்னாலும் வரமாட்டானுவோ, அப்படியொரு பொறவிச்சாரம் உள்ளவனுங்களாச்சே அந்த ஊர்க்காரப் பயலுவோ" (செடல், ப.128)

கோபால் பூவரும்பு பஞ்சம் பிளைக்க கண்டிக்கு சென்ற பிறகு செடல் சோகமாக இருக்கிறாள் ஊர் ஐனங்களும் மண்ணாங்கட்டியும் ஆறுதல்படுத்தியும் ஆறுதல் அடையாமல் இருக்கிறாள்இந்நிலையில் கீழ்ச்செருவாயில் ஏரி மண் எடுக்க வந்தவர்களில் தன் பெற்றோர்கள் வந்துயிருப்பார்கள் என்று வந்த செடலை தேடிவந்த கிழவி**"சொன்னா அப்பன்சாவான், சொல்லாட்டி ஆயா சாவங்கிற கதெயா இருக்கு" (செடல், ப.40)** என்ற பழமொழியின் வாயிலாக செடலின் நிலையை ஆசிரியர் பதிவுசெய்கிறார்.

விடுகதை

கிராம மக்களின் பேச்சில் விடுகதை அதிகமாக வெளிப்படும். ஏட்டுக்கல்வி இல்லாத காலகட்டங்களில் ஒரு செய்தியினை மனதில் ஆழமாகப் பதிய வைப்பதற்கு விடுகதையாக சொல்லுகிற வழக்கம் பின்பற்றப்பட்டது எனலாம். இம்முறை சமுதாய மாற்றத்தின் விளைவாக அழிந்து வருகிறது. இன்றைய காலகட்டங்களில் சிறுகதை, நாவல் போன்ற கிராமியம் சார்ந்த இலக்கியங்களில் இதன் எச்சத்தைக் காணமுடிகிறது. இமையம் அவர்கள் செடல் நாவலில் விடுகதை பரவலாக இடத்திற்கேற்ப பயன் படுத்தியுள்ளார்.கூத்தாடும் இடங்களில் மக்களை அமைதிப்படுத்தவும், கவனத்தை ஈர்க்கவும் கூத்தாடுபவர்கள் விடுகதையைப் பயன்படுத்துகின்றனர்.

1. வன வீரன் நகர் ஒரு ஊர், அது என்ன ஊர்?
வனம் என்பது காடு, வீரத்திற்கு புலி, நகர் என்பது ஊர்,
காடாம்புலியூர் (செடல், ப.191)

2. அரி என்றால் பகவான், தாரம் என்றால் மனைவி, பகவானின் மனைவி லட்சுமிகடாட்சம் பெற்றவன்தான் ஆட்டக்காரன் (செடல், பக்.191-192)

3. பதினொண்ணு எழுத்துள்ள மரத்தோட பேரு தெரியுமா?
கல்யாண முருங்கை மரம் (செடல், ப. 192)

4. வெத்திலைக்கு ஐஞ்சி பூ சொல்லு
எடுப்பூ, துடைப்பூ, கிழிப்பூ, மடிப்பூ, போட்டுத்துப்பூ (செடல், ப. 267)

போன்ற விடுகதைகள் மக்கள் சிந்தனையை தூண்டும் விதமாக அமைவதைக் காணமுடிகிறது.

மழை நம்பிக்கை

மனிதன் தன் சுய இலாபத்திற்காக காடுகளை அழித்து இயற்கையின் பருவநிலைகளை மாற்றினான். பெரும்பாலன காடுகள் அழிக்க பட்டதனால் பூமியின் வெப்பநிலை அதிகரித்த நிலையில் மழைபொழிவு இல்லாத சூழல் ஏற்படுகிறது. மழை பொழியும் பருவ காலங்களை அறிந்து, பூமியில் ஏற்படும் தட்பவெப்ப நிலை மாறுபாடுகளுக்கு ஏற்ப மழை பொழியும் அறிகுறிகளை நம் முன்னோர்கள் வகுத்தனர். தற்போது ஏற்பட்ட பருவ நிலை மாற்றத்தின் விளைவாக மழை பெய்யாமல் போகிறது. இந் நிலையை ஆசிரியர்,

"அடிமானத்துல மின்னுச்சுன்னா ஈரத்துணி காயறதுக்குள்ள மய வரும்பாங்க எல்லாத்துக்கும் வானத்து ராசா மனம் வைக்கணுமே." (செடல்,ப. 48)

பெண்கள் மீதான மூடநம்பிக்கை

தாய்வழிச் சமூகத்தில் பெண்களுக்கு மதிப்பும், உயர்வும் இருந்தது. தந்தை வழிச் சமூகம் தலையெடுத்தப்பின் பெண் ஆண்களின் உரிமைப் பொருளாகவும், சொத்தாகவும் மாற்றப்பட்டாள், இதனால் பெண்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் கீழ் நிலைக்கு தள்ளப்படுகின்ற சூழல் உருவாகியது. இதன்விளைவாக பெண்பிறப்பு இழிவான ஒன்றாகவும், ஆண் பிறப்பு புண்ணியமாகவும் கருதப்படுகின்ற சூழல் உருவாகியது. ஆண்சமுகத்தின் ஆதிக்கம், பெண்பிறப்பு மீதான மூடநம்பிக்கைகள் தோன்ற வழிவகுத்தது. இவை ஆண் சமுகத்தால் கட்டிக்காக்கப் பட்டுவருகின்றன. செடல் நாவலில் பெண்கள் மீது கட்டப்பட்ட மூடநம்பிக்கைகளை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

"எட்டாம் பொறவு குடும்பத்திற்கு ஆகாது, எட்டாம் பொறவு எட்டிப்பாத்த இடமெல்லாம் குட்டிச்சுவரு, சித்தப்பன்களுக்கு எள்ளும் தண்ணீயும் எறெப்பாள், அரசாள ஆண் இல்லாவிட்டால் அரசனும் ஆண்டியாவான், பூமியாண்ட மன்னனும் தலைசாய்ந்து மண்ணைக் கவ்வுவான். வீட்டுக்கரசன் இல்லியன்னா, மாடுகண்ணு தோத்து, வீடு, வாசமறந்து, சொந்தம் பந்தம் இழந்து தேசாந்திரியாகத் திரியநேரும்" (செடல், ப.18)

என்ற பழமொழிகள் பெண்களை இழிவுப் படுத்தும் நோக்கில் உருவானதை அறிய முடிகிறது.

இமையம் அவர்கள் செடல் நாவல் முழுவதும் கீழ்நிலை மக்களின் வாழ்வாதாரம் அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலை, சமுதாயத்தால் புறந்தள்ளப்பட்டு வாழ்கின்ற வாழ்க்கை முறை, கூத்து ஆடுபவர்களின் இறுதி வாழ்க்கை கேள்விகுறியாக இருப்பதனையும், அவர்களின் முன்னேற்றத்திற்கு இந்த சமூகம் எதையும் செய்யவில்லை என்பதனையும் தனது செடல் நாவலில் எடுத்துச் சொல்கிறார். இவரது எழுத்தினை படிக்கும் மக்கள் கீழ்நிலை மக்களின் வாழ்விற்கு தங்களால் முடிந்ததை செய்யவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவனாக அமைவதை உணரமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. இமையம், செடல், க்ரியா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல், 2006.

2. மருதம் (இரண்டாயிரத்திற்குப் பின்வெளிவந்த தமிழ்ப் புதினங்கள் ஆய்வுகள்) தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2007.

3. இமையம், வீடியோ மாரியம்மன், க்ரியா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, திசம்பர், 2008

4. கனக சுந்தரம், ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள், செவ்வேளகம் வெளியீடு, சென்னை, திசம்பர், 1985.

5.சண்முக சுந்தரம்.சு, தமிழில் நாட்டுப்புற பாடல்கள், காவ்யா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, ஆகஸ்ட், 2003.

6. சுப்பிரமணியன். ச.வே, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003.

7. தட்சிணாமூர்த்தி. அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 2005.